**Starting time 12.24 P.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 248/2001**

Deposition of **<u>D.W.-2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi,Gr. III Bench clerk of this court, on in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பொன்னுசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை</u>**: நான் இவ்வழக்கில் . பிரதிவாதிகள் தரப்பு 2-ஆம் சாட்சி. இவ்வழக்கின் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளை தெரியும். நான் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்கின்றேன். நான் எனது முதல் விசாரணைக்கான சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லியவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் உண்மைதான். ஆவணங்கள் எதுவும் எனது தரப்பில் குறியீட செய்யவில்லை.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** நான் இந்த வழக்கில் எத்தனாவது பிரததிவாதி என்றால், ஞாபகம் இல்லை. என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூல சங்கதிகளள் அனைத்தும் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். , அது எனக்கு தெரியுமா என்றால், தெரியம். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எனக்கு உறவினர்களா என்றால், இல்லை தெரிந்தவர்கள். 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்காகவும் சேர்த்துதான் நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யுதுள்ளேனா என்றால், ஆமாம், அது குறித்து அவர்களுக்கு தெரியுமா என்றால், தெரியும். 3-ஆம் பிரதிவாதிக்கு

உடல்நிலை சரியல்லாததால் சேலம் மருத்துவமனையில் அறுவை சிகிக்சை செய்து முடியாத நிலையில் உள்ளார். சுயநினைவு இல்லாமல் இருக்கிறார் என்றால், இல்லை, சுயநினைவுடன் இருக்கிறார்.

2. அவர்களுக்கும் நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்பதால் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலம் எற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு தாவா சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால், ஆமாம். தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால், எங்களுக்கு இலலை.

3. பெருமாள் கவுண்டர் சுதந்திர போராட்ட தியாகிக்கு பாத்தியப்பட்ட சொத்துதான் இது என்றால், அவர் பெயர் பெருமாள் செட்டியார். பெருமாள் கவுண்டர் தான் அவருடைய பெயர் என்றால், 1-ஆம் பிரதிவாதி ஒப்புக் கொண்டிருப்பதால் என்னுடைய சாட்சியம் ஒப்பு கொள்ளக்கூடியது அல்ல என்றால், சரியல்ல. பெருமாள் என்பவர் செட்டியாரா அல்லது கவுண்டரா என்றால், அவருடைய ஜாதி குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்து பெருமாள் கவுண்டருக்குதான் பாத்தியப்பட்டது என்றாலும், பெருமாள் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றாலும், நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

4. 1-ஆம் பிரதிவாதி சின்னப்பனின் தகப்பனார் பெயர் என்னவென்றால், ஞாபகம் இல்லை. பெருமாள் கவுண்டர் குறித்து எனக்கு தெரிந்தும் 1-ஆம் பிரதிவாதி தகப்பனார் பெயர் சொன்னால், முன்னுக்கு பின் முரணாக ஆகிவிடும் என்பதால் தான் ஞாபகம் இல்லை என்று கூறுகிறேன் என்றால், சரியல்ல. 1-ஆம் பிரதிவாதி எந்த வருடத்தில் தாவா சொத்தில் குடியேறினார்கள் என்றால், 1964, 1965 இருக்கும். ஆனால் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1966, 1967 இருக்கும் என்று கூறியுள்ளேன் என்றால், ஆமாம், முன்ன பின்ன இருக்கும். அவர்கள் எந்த வருடத்தில் வந்து குடியேறினார்கள் என்று எனக்கு தெரியாததால் தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல, எனக்கு தெரியும்.

5. 1966-ல் எனக்கு என்ன வயதிருக்கும் என்றால், 25, 30 இருக்கும் தற்போது எனக்கு வயது 75. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 4-ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால், 1948 ஜுலை 10. நான் அந்த தேதியில் பிறக்கவே இல்லை என்றாலும், எனக்கு 1965-ல் எனக்கு 10 வயது தான் இருக்கும் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என்னுடைய பிறந்த தேதி சம்மந்தமாக ஆதாரம் வைத்துள்ளேனா என்றால், வைத்துள்ளேன் ஆனால் தாக்கல் செய்யவில்லை.

6. சின்னப்பன் அந்த அநிலத்தில் கிணறு வெட்டியது சம்மந்தாகவும், இலவச மின் இணைப்பு பெற்றதும் எனக்கு தெரியும் என்றால், தெரியும். அந்த சமயத்தில் அரசாங்கம் சுதந்திர போராட்ட தியாதிகளுக்கு 10 ஏக் நிலம் கொடுத்து கிணறு வெட்டி இலவச மின்சார இணைப்பு கொடுத்தார்கள் என்றால், ஆமாம். அரசாங்கம் அந்த சொத்தை பெருமாள் கவுண்டருக்கு அரசாங்கம் கொடுத்ததா என்றால், பெருமாள் செட்டியாருக்கு தான் கொடுத்தது. பெருமாள் செட்டியாரை எந்த காலத்திலும் பெருமாள் கவுண்டர் என்று கூப்பிடமாட்டார்கள் என்றால், எங்கள் பகுதியில் ஒவ்வொருத்தருக்கும் இரு பெயர்கள் இருப்பது வழக்கம்.

7. எனக்கு இரண்டு பேர்கள் இருக்கிறதா என்றால், எனக்கு ஒரு பெயர் தான். எனக்கு ஏன் மற்றொரு பெயர் இல்லை என்றால், என்னை யாரும் இன்னொரு பெயர் வைத்து கூப்பிடவில்லை. அதனால் எங்கள் பகுதியில் இரண்டு பெயர்கள் வைத்து கூப்பிடும் பழக்கம் இல்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தில் முதல் பிரதிவாதியின் தகப்பனார் சுக்காகவுண்டர் மற்றும் தாயார் பெரியம்மாள் ஆகியோரை புதைத்ததற்கு கிராம பஞ்சாயத்து புதைத்தல் சட்டம் பிரிவு 5-ன் படி அனுமதி பெறவேண்டும் என்றால், நிலத்தில் பெற்றோர்களை புதைப்பது வழக்கம், அந்த வகையில் புதைத்துள்ளார்கள்.

8. தாவா சொத்தில் புதைத்திருந்தால் அனுமதி பெற்றிருக்கவேண்டும் என்றாலும், அனுமதி பெறாததால் தாவா சொத்தில் புதைக்கவில்லை என்றால், சரியல்ல, அங்குதான் புதைத்துள்ளார்கள். அவர்களை அங்கு புதைக்கவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. எந்த வங்கிக்கும் நான் ஏஜென்டாக

செயல்படவில்லை என்றால், ஆமாம். தெரிந்தவர்களுக்கு செய்து கொடுப்பேன். நான் பெரிதாக படிக்கவில்லை என்றால், நான் படித்த வரைக்கும் போதும்.

9. பாரத் ஸ்டேட் வங்கியில் லோன் வாங்கி கொடுப்பேன். கணக்கு தொடங்கி கொடுப்பேன். நான் சொசைட்டியில் உறுப்பினரா என்றால், ஆமாம், அதற்கான உறுப்பினர் எண் மற்றும் அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் உறுப்பினராக இருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல. வேண்டுமானால் தாக்கல் செய்கிறேன்.

10. பிரதிவாதிகள் தாவா சொத்தின் அனுபவ சுவாதீனத்தில் இருந்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. அவர்கள் அங்குதான் இருக்கிறார்கள். வாதிகள் திருடி விட்டதாக புகார் அளித்ததின் குற்ற எண் எனக்கு தெரியுமா என்றால், குற்ற எண் தெரியாது. வாதி முன்னால் தி.மு.க கவுன்சிலர் அவர் மீது புகார் அளித்து கைது செய்தது அனைவருக்கும் தெரியும். வழக்கிற்காக நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், உண்மையாக இருந்திருந்தால் அது சம்மந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால், சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்படடது.

Ending time : 12.52 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**